# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண் 66/2017

பெயர் : குமாரசாமி நாள் : 03.11.2022

வா.சா.1 – 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – குமாரசாமி - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் இந்த வழக்கை எனது நிலத்தில் தடம் இல்லையென்று கோரி தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 254/1, 256, 254 ஆகிய நிலங்களில் தடம் இல்லையென்று கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் 254/1 ல் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 84 செண்ட் ஆகும். அதில் எனக்கு 67 செண்ட் நிலம் உரிமையானது ஆகும். சர்வே எண் 254/1 ல் பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனது நிலத்திற்கான உட்பிரிவு தெரியாது. வழக்குரையில் உட்பிரிவு எண்ணை குறிப்பிட்டுதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி சொத்திற்கு எனது பெயரில் பட்டா உள்ளது. சர்வே எண் 254/1 ல் உள்ள சொத்துக்கள் ஆதியில் கருங்கண்ணன்(எ) பச்சமுத்துவிற்கு சொந்தமானது என்றால், சரியல்ல. பச்சியம்மாள் என்பவருக்குதான் சொந்தமானது. பச்சியம்மாளின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை கடந்த 1961 ம் ஆண்டு எனது தகப்பனார் மேற்படி பச்சியம்மாளிடமிருந்து கிரையம் பெற்றார். எனக்கு கருங்கண்ணன்(எ) பச்சமுத்துவை தெரியும். கருங்கண்ணன்(எ) பச்சமுத்துவிற்கு அர்த்தனாரி, சின்னையன்(எ) சின்னியன், பாவாயம்மாள், லட்சுமி என்ற இரு மகன்கள் மற்றும் இரு மகள்கள் என்றால், சரிதான். மேற்கண்டவர்களில் லட்சுமியை தவிர வேறு யாரும் தற்போது உயிருடன் இல்லை. சின்னையன்(எ) சின்னியன் என்பவரின் இரு மகன்கள்தான் 2, 4 பிரதிவாதிகள் என்றால், சரிதான். 3 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் மனைவி என்றால், சரிதான். எனது தாயார் பாவாயம்மாள் என்றால், சரிதான். எனது தகப்பனார் பெயர் செல்லப்பகவுண்டர்(எ) செல்லாகவுண்டர் ஆவார். எனக்கு ஒரு சகோதரன், ஒரு சகோதரி இருக்கிறார்கள் என்றால், சரிதான். 1 ம் பிரதிவாதி எனது தாய் மாமா என்றால், சரிதான். மேற்படி உறவு முறைகள் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை.

ஒப்பம் /குமாரசாமி

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.